DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No.86/2020**

| Deposition of the | : | PW1 | Caste | : | |
|---|---|---|---|---|---|
| Name | : | சந்திரன் | Age | : | 47 |
| F/N | : | ஆறுமுகம் | Occupation | : | பேன்சி பொருட்கள் வியாபாரம் செய்து வருகிறேன். |
| Village | : | உச்சிப்புளி | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 08-th day of May 2023.

**08.05.2023**

**முதல் விசாரணை**

நான் இராமநாதபுரம் மாவட்டம் உச்சிப்புளியில் குடியிருந்து கொண்டு பேன்சி பொருட்கள் வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை உச்சிப்புளி காவல் நிலையத்தில் வைத்து பார்த்துள்ளேன். இவ்வழக்கில் இறந்துபோன ராஜேஸ்கண்ணன் எனது மகன் ஆவார். வனிதா எனது மனைவி ஆவார். கடந்த 30.08.2019 ம் தேதி இரவு 07.30 மணியளவில் பிரப்பன்வலசையில் உள்ள கோல்டன் ஹோட்டல் அருகே என் மகன் எனது மனைவியுடன் TN 65 Q 1013 என்ற பதிவெண் கொண்ட TVS XL இருசக்கர வாகனத்தில் அரியமான் கடற்கரையில் இருந்து எங்கள் ஊருக்கு கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி வந்து கொண்டிருந்தபோது அவர்களுக்கு பின்னால் அதே திசையில் TN 06 T 3994 என்ற பதிவெண் கொண்ட Renault வெள்ளை நிற காரை குடிபோதையில் ஓட்டி வந்த ஆஜர் எதிரி எனது மகன் சென்ற இருசக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்படுத்தியதாக அவ்வழியாக சென்ற எனது தம்பி மகன் முனியசாமி போன் மூலம் எனக்கு தகவல் சொன்னார். சம்பவ இடத்திலேயே அவர்கள் இருவரும் இறந்துவிட்டதாக கேள்விபட்டு இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். இருவருக்கும் தலையின் பின்புறம் காயம் இருந்தது. எனது மனைவியின் இரண்டு கைகளும், எனது மகனின் இரண்டு கால்களும் உடைந்து இருந்தன. அதன் பின்பு உச்சிப்புளி காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். புகார் மனுவை நான் சொல்ல சொல்ல எனது தம்பி ராமச்சந்திரன் எழுதினார். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். (**புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**மறு விசாரணை :** இல்லை

**(ஒப்பம்/-க.பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2**
**இராமநாதபுரம்**

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No.86/2020**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW2 | Caste | : | |
| Name | : | முனியசாமி | Age | : | 24 |
| F/N | : | தேவதாஸ் | Occupation | : | கேஸ் அடுப்பு வியாபாரம் |
| Village | : | உச்சிப்புளி | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 08-th day of May 2023.

**08.05.2023**

**முதல் விசாரணை**

நான் இராமநாதபுரம் மாவட்டம் உச்சிப்புளியில் குடியிருந்து கொண்டு கேஸ் அடுப்பு வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை நான் பார்த்ததில்லை. இப்போது தான் முதன் முதலாக பார்க்கிறேன். சம்பவ இடத்தில் கார் மட்டும் தான் இருந்தது. கடந்த 30.08.2019 ம் தேதி இரவு 07.30 மணியளவில் பிரப்பன்வலசையில் உள்ள ஹோட்டல் மற்றும் பூங்கா அருகே இருசக்கர வாகனத்தில் சென்ற எனது தம்பி ராஜேஸ் மற்றும் எனது சித்தி வனிதா ஆகியோர் விபத்தில் காயம்பட்டு இறந்து கிடந்தார்கள். நான் சம்பவ இடம் வருவதற்கு சற்று முன்பாக ஒரு கார் சென்றது. அந்த கார் விபத்தை ஏற்படுத்தியது. காரை நிறுத்திவிட்டு அதை ஓட்டி வந்த நபர் அங்கிருந்து ஓடிவிட்டார். அந்த காரின் பதிவெண் TN 06 T 3994 ஆகும். அது Renault வெள்ளை நிற கார் ஆகும். பின்னர் நான் எனது பெரியப்பா அ.சா.1 க்கு போன் மூலம் தகவல் சொல்லிவிட்டு அங்கு வந்த போலீசாரின் உதவியுடன் இறந்தவர்களை ஆம்புலன்ஸில் ஏற்றி இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**மறு விசாரணை :** இல்லை

**(ஒப்பம்/-க.பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2**
**இராமநாதபுரம்**

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No.86/2020**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW3 | Caste | : | |
| Name | : | கோட்டைராஜ் | Age | : | 36 |
| F/N | : | ராமைய்யா | Occupation | : | கேஸ் அடுப்பு வியாபாரம் |
| Village | : | உச்சிப்புளி | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 08-th day of May 2023.

**08.05.2023**

**முதல் விசாரணை**

நான் இராமநாதபுரம் மாவட்டம் உச்சிப்புளியில் குடியிருந்து கொண்டு கேஸ் அடுப்பு வியாபாரம் செய்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன வனிதா எனது அக்கா ஆவார். ராஜேஸ் எனது அக்கா மகன் ஆவார். அ.சா.1 எனது மாமா ஆவார். சுமார் நான்கு, ஐந்து வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் மாலை 07.30 மணிக்கு பிரப்பன்வலசையில் உள்ள ஒரு ஹோட்டல் அருகே விபத்து நடந்ததாக அ.சா.2 எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார். நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது வனிதா மற்றும் ராஜேஸை மருத்துவமனைக்கு கொண்டு சென்றுவிட்டார்கள். பின்னர் நான் மருத்துவமனை சென்று பார்த்தபோது அவர்கள் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாக கூறினார்கள். அரியமான் கடற்கரையில் இருந்து எனது அக்காவும், எனது அக்கா மகனும் வியாபாரம் முடித்துவிட்டு இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தபோது ராமேஸ்வரத்தில் இருந்து வந்த வெள்ளை கார் ஒன்று மோதி விபத்து ஏற்பட்டதாக கேள்விபட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**மறு விசாரணை :** இல்லை

**(ஒப்பம்/-க.பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2**
**இராமநாதபுரம்**

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No.86/2020**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW4 | Caste | : | |
| Name | : | சிவராமகிருஷ்ணன் | Age | : | 25 |
| F/N | : | சந்திரன் | Occupation | : | பழைய இரும்பு வியாபாரம் |
| Village | : | மண்டபம் முகாம் | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 08-th day of May 2023.

**08.05.2023**

**முதல் விசாரணை**

நான் இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் முகாமில் குடியிருந்து கொண்டு பழைய இரும்பு வியாபாரம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது அப்பா ஆவார். இவ்வழக்கில் இறந்துபோன வனிதா எனது சின்னம்மா ஆவார். ராஜேஸ் எனது தம்பி ஆவார். சுமார் நான்கு வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் இரவு 07.30 மணியளவில் பிரப்பன் வலசை கோல்டன் ஹோட்டல் அருகே வனிதா மற்றும் ராஜேஸ் இருவரும் TVS XL இருசக்கர வாகனத்தில் அரியமான் கடற்கரையில் இருந்து உச்சிப்புளி நோக்கி வந்து கொண்டிருந்தபோது அவர்களுக்கு பின்னால் இருந்து வந்த Renault காரை அதன் ஓட்டுநர் குடிபோதையில் ஓட்டி வந்து விபத்து ஏற்படுத்தியதாக அ.சா.2 போன் மூலம் தகவல் சொன்னார். அதன் பின்பு நான் இராமநாதபுரம் அரசு மருத்துவமனை சென்று பார்த்தபோது அவர்கள் தலை மற்றும் கை, கால்களில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. அவர்கள் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாக கூறினார்கள். விபத்து ஏற்படுத்திய காரை ஓட்டி வந்த நபரின் பெயர் சதீஸ்குமார் என்று தெரிந்து கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**மறு விசாரணை :** இல்லை

**(ஒப்பம்/-க.பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2**
**இராமநாதபுரம்**